பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**25 03 2026** **7 15**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, இலங்கை அதிபர் திரு. அனுர குமார திசநாயகவுடன் இருதரப்பு உறவுகள் குறித்து தொலைபேசி வாயிலாக ஆலோசனை நடத்தியுள்ளார்.

2. பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டத்தின் கீழ் இதுவரை 4 லட்சத்து 27 ஆயிரம் கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. குஜராத் சட்டப்பேரவையில் பொது சிவில் சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது.

4. யுக்ரைன் மீதான தாக்குதலை ரஷ்யா மீண்டும் தீவிரப்படுத்தியுள்ளது.

5. கேலோ இந்தியா பழங்குடியினர் விளையாட்டுப் போட்டிகள் ராய்ப்பூரில் இன்று தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இலங்கை அதிபர் திரு. அனுர குமார திசநாயகவுடன் இருதரப்பு உறவுகள் குறித்து தொலைபேசி வாயிலாக ஆலோசனை நடத்தியுள்ளார்.

மேற்காசிய நிலவரம் குறித்தும் இலங்கை அதிபருடன் ஆலோசனை நடத்தியதாக சமூக வலைதளத்தில் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

எரிசக்தி பாதுகாப்பு மற்றும் தடையற்ற கப்பல் போக்குவரத்து குறித்தும் இலங்கை அதிபருடன் ஆலோசனை மேற்கொண்டதாக பிரதமர் கூறியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையே எரிசக்தி மற்றும் பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்தும் அவருடன் விவாதித்ததாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் மஹாசாகர் கடல்சார் தொலைநோக்குப் பார்வை குறித்தும், அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கும் கொள்கை குறித்தும் இலங்கை அதிபருடன் பேச்சு நடத்தியதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு துறைகளில் இருநாடுகளும் இணைந்து பணியாற்ற இந்தப் பேச்சுவார்த்தையின்போது ஒப்புக்கொள்ளப்பட்டதாக திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மேற்காசிய போர் சூழல் காரணமாக இந்தியா எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் நேற்று தமது துறை அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் பேசிய அமைச்சர், உலக அளவிலும், மண்டல அளவிலும் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு நிலைமை குறித்து உன்னிப்பாக கண்காணிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

உலகளாவிய அரசியல் சூழ்நிலையில் ஏற்படும் மாற்றங்கள் குறித்தும், புதிய வாய்ப்புகள் குறித்தும் ஆய்வு செய்ய வேண்டும் என்று அவர் கூறினார்.

நாட்டின் பாதுகாப்பு, ஏற்றுமதி இறக்குமதி நிர்வாகம் குறித்தும், பாதுகாப்பு தளவாட உற்பத்தியை அதிகரிப்பது குறித்தும் அவர் ஆலோசனை நடத்தினார்.

தற்போதுள்ள ராணுவ தளவாடங்களை ஆய்வு செய்து தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

ராணுவ நடவடிக்கைகள் மற்றும் தொழில்நுட்ப ரீதியான போர் அணுகுமுறைகள் குறித்தும் கண்காணித்து அதற்கேற்ற வகையில் நாட்டின் பாதுகாப்பு நிலைமையை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அடுத்த பத்தாண்டுகளுக்கான பாதுகாப்பு செயல் திட்டத்தை உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

ராணுவ தளவாடங்களின் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பது குறித்தும், ராணுவ தயார் நிலை குறித்தும் திரு ராஜ்நாத் சிங் வலியுறுத்தினார்.

<<<<>>>>

பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டத்தின் கீழ் இதுவரை 4 லட்சத்து 27 ஆயிரம் கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த வேளாண்துறை இணையமைச்சர் திரு. ராம்நாத் தாக்கூர், இத்திட்டத்தின் கீழ் இதுவரை 22 தவணை தொகைகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இதன் மூலம் 9 கோடியே 35 லட்சம் விவசாயிகள் பயனடைந்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

விவசாயிகளுக்கு உதவும் வகையிலும் அவர்களது சந்தேகங்களை தெளிவுபடுத்தும் வகையிலும் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான செயலி உருவாக்கப்பட்டுள்ளதாகவும், இது 11 மொழிகளில் செயல்படுவதாகவும், இதுவரை 53 லட்சம் விவசாயிகள் இதன் மூலம் பயனடைந்திருப்பதாகவும் திரு. ராம்நாத் தாக்கூர் தெரிவித்தார்.

<<<<>>>>

மக்களவையில் நிதி மசோதா மீதான விவாதங்களுக்கு மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று பதிலளித்துப் பேசவுள்ளார்.

திவால் சட்ட திருத்த மசோதா மீதான விவாதமும் மக்களவையில் இன்று தொடங்க உள்ளது.

மாநிலங்களவையில் மத்திய ஆயுதக் காவல் படையினர் நிர்வாக மசோதாவை உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று அறிமுகம் செய்ய உள்ளார்.

மக்களவையில் நேற்று நிறைவேற்றப்பட்ட மூன்றாம் பாலினத்தவர் உரிமைகள் தொடர்பான மசோதா மீதான விவாதம் மாநிலங்களவையில் இன்று நடைபெற உள்ளது.

<<<<>>>>

குஜராத் சட்டப்பேரவையில் பொது சிவில் சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த மசோதா மீதான விவாதம் நேற்று 7 மணி நேரம் நடைபெற்றது.

இந்த மசோதா குறித்து பேசிய அம்மாநில முதலமைச்சர் திரு. பூபேந்திர பட்டேல், இந்த மசோதா சம உரிமையை உறுதி செய்யும் என்று கூறினார்.

நாட்டில் குற்றவியல் சட்டங்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியாக உள்ள நிலையில் திருமணம், விவாகரத்து மற்றும் சொத்துரிமை தொடர்பான சட்டங்கள் மத ரீதியாக வேறுபட்டுள்ளன என்றார்.

இத்தகைய வேறுபாடுகளை நீக்கி சமத்துவத்தை நிலைநாட்டுவதே இதன் நோக்கம் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த சட்டத்தால் மற்ற உரிமைகள் எதுவும் பாதிக்கப்படாது எனவும் திரு. பூபேந்திர பட்டேல் விளக்கம் அளித்தார்.

நாட்டில் உத்தராகண்ட் மாநிலத்தை தொடர்ந்து தற்போது குஜராத்திலும் பொது சிவில் சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது.

<<<<>>>>

நாட்டில் தேவையான அளவு உரங்களை முறையாக விநியோகிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த மத்திய உரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல், விவசாயிகளுக்கான உர தேவைகள் மாநிலங்கள் வாரியாக ஒவ்வொரு மாதமும் மதிப்பீடு செய்யப்படுவதாக கூறினார்.

இந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் உரங்களின் இருப்பு கண்காணிக்கப்பட்டு, விநியோகம் முறையாக மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார்.

தற்போது அனைத்து மாநிலங்களிலும் உரங்களின் இருப்பு போதுமான அளவு உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

மத்திய அரசின் இந்த நடவடிக்கைகள் தடையற்ற உர விநியோகத்தை உறுதி செய்திருப்பதாக திருமதி அனுப்பிரியா பட்டேல் கூறினார்.

<<<<>>>>

யுக்ரைன் மீதான தாக்குதலை ரஷ்யா மீண்டும் தீவிரப்படுத்தியுள்ளது.

யுக்ரைன் மீது நேற்று ஒரே நாளில் 948 ட்ரோன்களை செலுத்தி ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதன் காரணமாக லீவ் நகர பகுதியில் 5 பேர் உயிரிழந்திருப்பதாகவும், 22 பேர் காயமடைந்திருப்பதாகவும் அந்நகர மேயர் தெரிவித்தார்.

யுக்ரைனின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள மேலும் 3 நகரங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக யுக்ரைன் அரசு கூறியுள்ளது.

ரஷ்யா தாக்குதலைத் தொடங்கிய 4 ஆண்டுகளில் தற்போது யுக்ரைன் மீது மீண்டும் அதிக அளவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

நாட்டின் பல பகுதிகளில் அடுத்த சில நாட்களில் வெப்பம் அதிகரிக்கக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாட்டின் வடமேற்குப் பகுதிகளில் சில இடங்களில் லேசான மழை பெய்யும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

பிஹார், ஜார்கண்ட், ஒடிசா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களின் சில இடங்களில் காற்றுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பெரும்பாலான இடங்களில் அடுத்த சில நாட்களில் அதிகபட்ச வெப்பநிலை 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை உயர்ந்து காணப்படும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

முதலாவது தில்லி சர்வதேச திரைப்படத் திருவிழா புதுதில்லியில் இன்று தொடங்கி வரும் 31ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

<<<<>>>>

நடப்பு நிதியாண்டின் முதல் 3 காலாண்டுகளில் நாட்டின் ஏற்றுமதி, 5 புள்ளி இரண்டு ஆறு சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய வர்த்தகத்துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா கூறியுள்ளார்.

<<<<>>>>

பிரதமரின் சூரிய மின்சக்தி வீடுகள் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் இதுவரை 26 லட்சம் வீடுகளில் சூரிய சக்தி அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளதாக மத்திய மின்துறை இணையமைச்சர் திரு. ஸ்ரீபத் நாயக் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

கேலோ இந்தியா பழங்குடியினர் விளையாட்டுப் போட்டிகள் ராய்ப்பூரில் இன்று தொடங்குகிறது.

மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா இதனைத் தொடங்கி வைக்கிறார்.

ஏப்ரல் 3ஆம் தேதி வரை நடைபெற உள்ள இப்போட்டியில் தடகளம், ஹாக்கி, கால்பந்து, மல்யுத்தம், வில்வித்தை உள்ளிட்ட விளையாட்டுகள் இடம்பெற்றுள்ளன.

ராய்ப்பூர், ஜக்தல்பூர், அம்பிகாபூர் ஆகிய 3 நகரங்களில் போட்டிகள் நடைபெற உள்ளன.

30 மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களைச் சேர்ந்த ஆயிரத்து 300க்கும் அதிகமான வீரர்கள் இதில் பங்கேற்க உள்ளனர்.

பழங்குடியின பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்களின் விளையாட்டுத் திறமையை அங்கீகரிப்பதும், தேசிய அளவில் அவர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவதுமே இப்போட்டியின் நோக்கம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

--------------

தேசிய உள்ளரங்கு தடகள சாம்பியன் போட்டியில் **Pole Vault**-ல் தமிழகத்தின் பரணிகா இளங்கோவன் தங்கப் பதக்கம் வென்றார்.

புவனேஸ்வரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் அவர் **4** புள்ளி இரண்டு இரண்டு மீட்டர் கம்பு ஊன்றி தாண்டி இந்தப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

--------------

தாமஸ் உபேர் கோப்பை பேட்மிண்டன் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி ஏப்ரல் **24**ஆம் தேதி முதல் மே **3**ஆம் தேதி வரை டென்மார்க்கில் நடைபெறுகிறது.

**<<<<The End>>>>**